# முத்துத் தாண்டவர்

யோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

696

SERFOGI'S ... TANJORE

696

அணா - 2

## புதிய வெளியீடுகள் :

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

**இயற்றியவை**

1. அகஸ்தியர் யாத்திரை 1-10

இந்நூல், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாட்டி நடத்துவது; மனித சமுதாயம் புது வாழ்வு பெற்றுப் புனிதமுறும் வழிகளை அகஸ்தியரே விளக்குவதாய் அமைந்துள்ளது.

2. திருநூல் (3-ஆம் பதிப்பு) 2-4

இந்நூல், இறைவனடிபற்றி, தூயவாழ்வு வாழ்ந்து இன்ப நிறைவுற்றோங்குவதற்கு வழி காட்டுகிறது; ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறத் தக்கது.

---


**அன்பு நிலயம்**

இராமச்சந்திரபுரம்

திருச்சி ஜில்லா.

# முத்துத் தாண்டவர்

பதிப்புரிமை

மூன்றாம் பதிப்பு : 1945

விலை அணா 2

மெத்ராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்

# முத்துத் தாண்டவர்

(வரலாறும், உபதேச மணிகளும்)

யோகி
ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

# பதிப்புரை

இக்குறுஞ்சுவடியின் மூன்றும் பதிப்பை, தமிழன்னையின் திருவடியில் வைத்து வணங்குகிறோம். முத்துத் தாண்டவர் அருட்பாவலர்; இறைவனுக்கே பாமலர் சூட்டி அவனருளிற் கலந்த திருவடியார். அவர் பாடல்கள் இப்போது தமிழ் நாட்டில் வழங்குகின்றன. அவர் வரலாறும், பாடல்களிற் சிலவும் இந்நூலில் அடங்கியுள்ளன. இதைக் குறுஞ்சுவடியாக எழுதியுதவிய **யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கட்கு நன்றி.

அன்பு நிலயத்தார்.

இராமச்சந்திரபுரம்,
15—3—1945.
சுகூ—ந—கூ

# முத்துத் தாண்டவர்

## க. நமது கோயில்கள்

நாம் எல்லா உரிமைகளேயும் இழந்தாலும், ஓர் உரிமையை மட்டும் இழக்கவில்லே. அதுதான் கலே யுரிமை! நமது கலேகள், கோயில் வடிவாக நிற்கின்றன. அவை இறைவனேப் போலவே அமரத்தன்மை பெற்றுவிட்டன. கோயிலுக்குள் சென்ருல் வேத கானம், தேவார-திருவாசக-திரு வாய்மொழியிசை, நாதஸ்வரம், நந்தி வாத்தியம், அன்பர் அருட் பாடல்கள் - எல்லாம் நமது கலே யின்பத்தைக் கணீரெனப் பேசு கின்றன. பெரியமேளத்துடன்,

சின்னமேளமுங் கேட்கிறது. பாடலுடன் உருத்திரகணிகையர் ஆடலையும் காண்கிறோம். இந்த நாதக்கலையும் பரதக்கலையுந் தவிர, சுவர்களிலும் தூண்களிலும் சிற்பக்கலைகள் நமது கண்ணுக்கு விருந்தளிக்கின்றன.

சீர்காழித் தோணியப்பர் கோயிலில் கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளிக்கும் இந்தக் கலைகளை யெல்லாம், இன்றும் உயிர்க்களையுடன் இருக்கக் காணலாம். ஒரு படிப்புமில்லாமல், இந்தக் கலை விளக்கத்தைக் கண்டே மகா மேதாவிகளான புலவர்கள் நந் தமிழ்நாட்டில் உண்டு. அவர்களில் ஒருவர் **முத்துத் தாண்டவர்.**

# உ. தெருவில் வாரானோ!

கொஞ்ச காலத்திற்கு முன்னே, தமிழ் நாடெங்கும் ஒரு பதம் பிரமாதப்பட்டது ' தெருவில். விளையாடும் குழந்தை முதல் மைக் (Mike) அதிரப் பாடும் வித்துவான்கள் வரையில்,

இ-ம் : சௌராஷ்டிரம் – ஆதி தாளம்

பல்லவி

தெருவில் வாரானோ-என்னைச் சற்றே
திரும்பிப் பாரானோ ? (தெரு)

அநுபல்லவி

உருவிலியொடு திரிபுரத்தையு
முடனெரிசெய்த-நடனராஜன்
(தெரு)

சரணம்

போதுபோவ தில்லையே-
யெனக்கொரு

தூதுசொல்வா ரில்லையே!
ஈதறிந்தோ ரில்லையே-
பொய் மேற் குற்றம்
ஏதொன்று மில்லையே!
வேதனு மாலும்
மூவாயிருந்திரள்-
விண்ணவருந்தொழ
ஆடிய பாதன் (தெரு)

என்ற பதத்தைப் பாடி மகிழ்ந்தனர்! இந்தப் பாட்டிற்கு ஏகக் கிராக்கி, ஏகக் கூட்டம்; சடசட வென்று ஆடிப் புளியம் பழம் உதிர்ந்தது போல் கரகோஷம். இதற்கு 'மீண்டும்' போட்ட குரல்களுக்குக் கணக்கில்லை. இப்படி ஒரேயடியாக நமது உள்ளத்தை அள்ளிய பதத்தைப் பாடிய அருட்கவியே, முத்துத் தாண்டவர்!

"வாசல்முன் நில்லாளே? -
எனக்கொரு -
வாசகம் சொல்லாளே?

நேசமாய்ப் புல்லேனே? -
கனே வைத்த-
ராஜனே வெல்லேனே?

தேசிகன் அம்பல வாணன்
நடம்புரி-
தேவாதி தேவன்
சிதம்பர நாதன்"

என்று பதத்தில் பாடியபடி அபிநயம் பிடிக்கும்போது, நாமே காதலியாகி, உள்ளத்திலுள்ள பரமாத்மனே அவ்வாறு பாவனு ரசத்துடன் கூவி யழைக்கிரும். உள்ளத்தைத் தொடுவதே உண்மைக் கவி. அப்படி உள்ளத்தைத் தொடும் பல கீர்த்தனங்களேச்

செய்த புண்ணியப் புலவர் முத்துத் தாண்டவர். அவர் வரலாறு பாடல்களாலும் பரம்பரைக் கதைகளாலும் சிறிது தெரிகிறது:

## ௩. அநாதைச் சிறுவன்

சீர்காழிக் கோயிலில் ஒரு சிறுவனைக் காண்கிறோம். அவன் தாய் தந்தை யில்லாத அநாதை என்பது பார்த்தாலே தெரிகிறது: எலும்பெடுத்த உடம்பு, பிசுக்குப்பிடித்த தலை; பித்துப் பிடித்ததுபோலத் திரிகிறான். அவனைச் சில உறவினர் தருமத்திற்காகச் சோறு போட்டு வளர்க்கிறார்கள். அவன் தினம் கோயிலுக்கு வருகிறான்; சிவ சக்தி சந்நிதியில் நெடு நேரம்

நிற்கிறன்; அன்பர் பாடும் பாடல்களைக் கேட்டுத் தானும் பாடுகிறன்; கண்ணீர் வடிக்கிறன். மேளகாரர் வாசிப்பை ஊன்றிக் கேட்கிறன்; உருத்திர கணிகையர் ஆடல் பாடல்களைக் கண்டு பரவசங்கொள்கிறன்; கோயிலைச் சுற்றிச் சுற்றி வந்து 'சிவ சிவ' என்று ஜபம் செய்கிறன்; பாட்டு முணுமுணுக்கிறன். பிறகு ஒரு மூலையில் உட்கார்ந்து ஏதோ சிந்திக்கிறன்- இந்தச் சிறுவனே தாண்டவன் என்பவன்.

தாண்டவன், வயது முதிர்ந்து சரியான வாலிபக்காளையாகிறன். அவன் தந்தையர் பரம்பரையாகக் கோயிலில் வாத்தியத் தொழில் செய்தவர்கள்.

ஆனால் இவனை ஒரு கருமநோய் பிடித்துக்கொண்டதால், குலத் தொழில் கற்க முடியவில்லை. தவிரவும் பிணியுடலிலும், உல குறவிலும் தாண்டவனுக்கு அபி மானமில்லை. அவனுக்குத் தந்தை சிவன், தாய் உமை, சிவ பக்தியே செல்வம்! வேறெந்த ஆசையுங் கிடையாது.

## ௩. சிவபாக்கியம்

அக்காலத்தில் சீர்காழிக் கோயி லில் சிவபாக்கியம் என்றொரு உருத்திரகணிகை யிருந்தாள். யாழும் குழலும் அவள் குரலுக் குத் தோற்றுப்போகும்; நடனக் கலையில் மாதவி போன்றவள்! அவள் விலைத்தொழிலை வெறுத் துக் கலைத் தொழிலை மதித்தாள்;

கலையையும் கடவுளுக்கே நிவே தித்தாள். கோயிலில், அவள் தினம் வந்து, பக்தி பரவச கீதங் கள் பாடுவாள்; பாவரசம் ததும்ப ஆடுவாள். அவள் பாடல் கள், 'மனமே! உலக சுகத்தில் என்ன இருக்கிறது? அதை மற; சிவானந்தத்தையே தேடு!' என்ற பொருளில் இருக்கும். தாண்டவனுக்கு இந்தத் தாசி யிடம் பயபக்தி உண்டாயிற்று. அவள் உடலழகை அவன் பாராட்டவில்லை; அவளுடைய உள்ளுணர்வு, இனிய பாடல், ஆடல், அவள் பாடலிலுள்ள பொருள்-இவையே தாண்டவ னைக் கவர்ந்தன. தாண்டவன் தினம் அவள் வீட்டிற்குச் சென்று, பக்திப்பாடல்களைக்

கேட்டுருகினன். அவளுக்கும் இவனது மாசற்ற அன்பு பிடித் திருந்தது. கலைக்கும் ரசிகனுக் கும் உள்ள உறவு, நாவிற்கும் சுவையான பண்டத்திற்கும் உள் ளது போலாகும்!

## ரு. பசிப் பிணி

உலகில் எவ்வளவு நல்லவரா யிருந்தாலும் சில பொருமைப் புல்லர் கெட்ட பெயர் சூட்டிக் கலகம் செய்வதுண்டு. சிவபாக்கி யத்தின் மேலும் அவ்வாறு பொருமை கொண்டு அவளது பக்தியைப் பாசாங்கு என்று பழித்தனர் சிலர்; அவருள் தாண்டவன் உறவினரும் சேர்ந் தனர். தாண்டவனை, "அந்தச் சிறுக்கி வீட்டிற்குப் போகுல்.

இந்த வீட்டை மிதிக்கக் கூடாது" என்று உறவினர் கண்டித்தனர். தாண்டவனுக்கு உறவினரின் அடிமையாயிருக்கப் பிடிக்க வில்லை. "நாமார்க்கும் குடியல் லோம்" என்ற சொல் அவன் மனதிற்குத் துணிவீந்தது. அவன் உறவினரை உணவுடை கேட்ப தில்லை; தானுக வருவதை யுண் பது; இன்றேல், சும்மா சிவன் சித்தம் என்றிருப்பது ஒரு நாள் பசிப்பிணி அவனைச் சோதித்தது; கோயிலுக்குச் சென்று, நீண்ட நேரம் சிவதரிசனத்தில் பசியை மறந்தான். பிறகு வாகன மண்ட பத்திற்குச் சென்று, ஒரு காளை வாகனத் தடியில் படுத்து, "ரிஷபாரூடனை சிவபெரு மானே, நீ எல்லாருக்கும் படி

யளப்பவன் என்ற நம்பிக்கை யுண்டு. என்னை ஊட்டினால் உண்கிறேன். இன்றேல், இப்படியே பசி என்னை உன்னடி சேர்க்கட்டும்" என்று படுத்துறங்கிப் போனான்.

## ௩. "தில்லை செல்"

அர்த்தஜாமம் ஆகி, கோயிலைப் பூட்டிக் குருக்கள் வீட்டுக்குப் போய்விட்டார். மௌன நிசி; அப்போது குருக்கள் மகள் போன்ற ஒரு சிறுமி, வாகன மண்டபத்தில் படுத்திருந்த தாண்டவனை எழுப்பினாள். தாண்டவன் திடுக்கிட்டெழுந்தான்! "தாயே! என்னை ஏன் எழுப்பினாய்? மறுபடியும் பசி—பிணிக் கவலைகள் வந்து விட்டனவே?"

என்று தாண்டவன் நொந்தான். "அப்பனே, விசனப்படாதே; இதோ உணவு! பசிதீர்" என்று அந்தச் சிறுமி பரிவுடன் உதவினாள். தாண்டவன் பசி தீர்ந்தது. "அம்மா, இந்தப் பசிப்பிணி தீர்ந்தது போலவே, எனது உடற்பிணியும் தீர்ந்தால் கவலை யில்லாமல் சிவபக்தி செய்து கொண்டிருப்பேன்" என்றான் தாண்டவன். "அப்பனே, நீ தில்லை செல்; நடராஜனைப் பாடு; பிணி தீரும்" என்றாள் சிறுமி. "அம்மையே! பேதை, இலக்கண இலக்கியங்களறியேன்; சிக்ஷையில்லாதவன்; நானாவது......... பாடுவதாவது!" என்று தாண்டவன் மனஞ்சோர்ந்தான். "அப்பனே, அவனருள் இருந்தால்,

எதுதான் வராது? போ, சிதம்பரம்; சந்நிதியில் வணங்கு. முதலில் நீ எந்த வாய்ச்சொல் கேட்கிருயோ, அதைப் பல்லவியாகக் கொண்டு பாடு;......மற்றதெல்லாம் நடராஜப் பெருமான் அருளால் வரும்" என்று கூறிச் சிறுமி மறைந்தாள்!

## எ. 'முத்துத் தாண்டவன்'

"அந்தச் சிறுமி யார்?............
இதென்ன அதிசயம்...! இதை நம்ப முடியுமா?" என்று இக்கால ஆராய்ச்சி மூளைகள் அலசிப் பிழிந்து, நாத்திக முடிவு கூறும். ஆனல், அருட்கவிகள் வாழ்வில் இத்தகைய சம்பவங்கள் பல நடந்திருக்கின்றன!

என் வாழ்விலேயே இப்படிச் சம் பவங்கள் நடந்திருப்பதால், இதை நான் மறுக்கமுடியாது. சாக்ஷாத் சிவசக்தியே சித்த சுத்தியுள்ள தாண்டவனுக்கு, அருளெழுச்சியும் ஆதேசமும் அளித்தாள். அப்படியே தாண் டவனும் நம்பிக் கண்ணீர் பெருக்கி, இரவெல்லாம் அம் பாள் சந்நிதியில் உட்கார்ந்து மெய்ம்மறந்து போனான்.

அருணோதயமாயிற்று, கோயில் திறந்தது; குருக்கள் வந்தார். அம்பாள் சந்நிதியில் இவன் சிலை மாதிரி உட்கார்ந்தி ருந்தான். தாண்டவனா?.....இங் கெப்படி வந்தாய்...?உம்...என்று குருக்கள் உச்சஸ்தாயியில் குர லெடுத்தார். தாண்டவன் பேச

முடியாமல் திணறி, "அம்பிகை ......என் தாய்...எனக்கு அருள் செய்தாள்...அன்னையைப் பார்த்துக் கொண்டே இரவெல்லாம் இங்கிருந்து விட்டேன்!" என்றான். அவன் முகத்தில் ஒரு திவ்ய தேஜஸ் விளங்கியது! குருக்கள் அவனைப் பயபக்தியுடன் பாராட்டி, "முத்துத் தாண்டவன்" என்ற திருநாமம் சூட்டித் தில்லைக்கனுப்பினர்.

## அ. கலை வடிவம்

தில்லையை மிதித்தவுடனே அன்பன் உடல் பூரித்தது; உள்ளம் சிலிர்த்தது! வீதி வலம் வந்து, மதில் வலம் வந்து, கோயிலைச் சுற்றி, முத்துத் தாண்டவன் சிவகங்கையில் நீராடித் தனது பிணி

பாவங்களெல்லாம் போனதாக உணர்ந்தான்; பஞ்சாக்ஷரி ஜபம் செய்து, மனத்தை ஏகாக்கிரப் படுத்தி, நடராஜா சந்நிதி சென்ருன்.

ஆ! அந்த ஆனந்தக் கலேவடிவைப்போல உலகில் எங்கே பார்க்க முடியும்? வடமொழியும் தென்மொழியும் பிறந்த டமருகம் ஒரு கையில், ஞானக்கனல் ஒரு கையில், அன்பரைக் காக்கும் அருட் கருணை ஒரு கையில் கொண்டு விளங்குகிருன் இறைவன்! ஒரு கை, "மனிதா! நீ உய்ய வேண்டுமாளுல், மான் போலத் தாவும் மனத்தை அடக்கு; அகங்காரமான முயலகனை நசுக்கு; இதோ எனது குஞ்சித பதநிழலில் குடிகொண்

டிரு!'' என்று காட்டுகிறது. ஆக்கல், அளித்தல், படைதல், மறைத்தல், காத்தல் ஆகிய ஐந்தொழில்களையும் விளக்குகிறது நடராஜ வடிவம். அத்துடன் வாழ்விற்கு இன்றியமையாத இரவியும் மதியும் கனலுமே முக்கண்களாகவும், அருளே கங்கையாகவும் வளர்கின்றன. நடனம் என்பதும் சிருஷ்டியாடலே!

## ௬. பூலோக கைலாசம்

அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருமூலர், பட்டினத்தார், தாயுமானவர், அருட்சோதிவள்ளலார் போன்ற தெய்வப் புலவர்களுக்கு ஆவேசமளித்த அந்தச் சபாநாதர் முன்னே முத்துத் தாண்டவர்

நின்று தீப தரிசனம் கண்டு கொண்டிருந்தார்! அச்சமயம் "பூலோக கைலாசம்" என்றொரு வாய்ச்சொல் எழுந்தது! அதைக் கேட்டதுமே கவிவாணி தாண்டவர் உள்ளத்தில் தாண்டவமாடத் தொடங்கி விட்டாள்! கலியாணி-ராகம் ஜம்பை தாளத்தில், "பூலோக கைலாசம்" என்ற பதம் முத்துத் தாண்டவர் வாக்கில் உதித்தது.

இ-ம்: கலியாணி - ஜம்பை தாளம்

பல்லவி

பூலோக கைலாச கிரி
சிதம்பர மல்லாமல்
புவனத்தில் வேறுமுண்டோ?
(பூலோ)

## அநுபல்லவி

சாலோக-சாமீப-சாரூப-சாயுச்ய-
சபைவாணர் ஆனந்தத்
தாண்டவம் புரிவதால் (பூலோ)

## சரணம்

பூவாவிகளும் வயலும்
ஓவாமலே பெருகும்-
பொன்னி நதியும் தெருவும்
மன்னிய வளங் கண்டு-
தேவர்மூவர் முதல்-
பாவாணர் அனைவருஞ்
சிவஸ்தலத்தினி லதிகந்-
தில்லைவன மென்கையால்
(பூலோ)

# ௧௦. அன்புத் தீ!

அன்புத் தீ பற்றி விட்டது! இனி
அது உள்ளத்தை உருக்கி

அருட்பாடலாக வார்க்க வேண்டியதுதானே? முத்துத் தாண்டவர் அன்று முதல் சுற்றுலகை மறந்து துறந்தார்; இறைவனைச் சரண் புகுந்தார்; அவன் திருப்புகழைப் பாடுவது தவிர வேறு எதையும் நாடாதொழிந்தார்; தினம் சிவகங்கையிற் குளித்துப் பூசி பஞ்சாக்ஷரி ஜபம் செய்து கொண்டே சிற்சபேசன் முன்பு மெய்ம்மறந்து நிற்பார். அச்சமயம் அங்கே தோத்திரம் செய்யும் அன்பர் வாக்கினின்று எந்தச் சொல் வருகிறதோ, அதையே எடுப்பாக வைத்து, இறைவனுக்குப் பாமாலை சூட்டிப் பாடுவார், ஆடுவார்; பிறவி ஈடேறிற்று என்று இன்புறுவார்.

## கக. அன்பே தொழில்!

இறைவன் அன்பனைக் காத்தான்; வறுமை தீர்த்தான்; கரும நோயைக் கணத்தில் மாற்றினான். தினம் பஞ்சாட்சரப்படியில், ஐந்து பணம் அவருக்காக வைத்திருக்கும். யார் வைத்தது என்று தெரியாது...! அதனால் கவியின் வறுமை ஒழிந்தது. இறைவனை அன்பு செய்வதே அவர் கருத்தாயிற்று. இறைவனருளை மேன்மேலும் தேடுவதைத் தவிர வேறு தேட்டம் ஒழிந்தது.

## கஉ. தேடித் திரியாதே!

இ-ம்: நாகவராளி-ஆதி தாளம்

பல்லவி

தேடித் திரியாதே நெஞ்சே -
தேடித் திரியாதே (தேடி)

## அநுபல்லவி

தேடித் திரிந்து இளையாதே-நெஞ்சே
சிற்றின்பத்தாலே
செகமெல்லாம் பஞ்சே (தேடி)

## சரணம்

'நான்' என்ற ஆணவம்
தன்னையே நீக்கு;
நாதாந்தப் பேரொளி
தன்னிலே தாக்கு;
மோனமாம் மந்திரத்
துண்மையை நோக்கு;
முக்திக்கு வித்தாய்
முழுமதி யாக்கு! (தேடி)

என்று மனத்தை அவர் அடக்கி வென்றார். அடங்கிய மனத்தில் மேன்மேலும் அருளூற்றுப் பொங்கிப் பொசிந்தது.

## கூ. ஆறு வழிவிட்டது

முத்துத் தாண்டவர், சீர்காழியி லிருந்து கொள்ளிடத்தைத் தாண்டி வந்து, சபாநாதரைத் தரிசித்துச் செல்வது வழக்கம். ஒரு நாள் கொள்ளிடத்தில் வெள்ளம் கரை புரண்டோடியது தில்லைக்கு வர முடியாமல் அன்புள்ளம் தவித்தது. அத் தவிப்பே ஒரு காம்போதிக் கீர்த்தனமாக உருக்கொண்டது !

" சேரன் சோழன் பாண்டியன்
இரணியவன்மன் கோபுரமும்,
சூர வீரப்ப பூபன்
செய்ததிரு மதில்களும்,
பாருலகம் போற்றுகின்ற
பஞ்சாட்சரப் படிகளும்,

ஆரணங்கள் சூழ்ந்ததிரு
ஆயிரக்கால் மண்டபமும்
காணுமல்—வீணிலே—காலம்
கழித்தோமே!''

என்று பாடித் துணிந்து இறங்கியதும், திருவருளால் ஆறு, வழி விட்டது. முத்துத் தாண்டவர் ஆனந்த நடேசனைத் தரிசித்து, 'எந்த இடர் வந்தாலும், பொருட்படுத்தாமல், என் ஐயனை, தயாபரனை, சிற்றம்பலவாணனைத் தவருமல் தரிசனம் செய்வேன்!'' என்று பாடினர்.

## கச. அருமருந்து!

ஒரு நாள் இரவில் வரும்போது, கவியைப் பாம்பு தீண்டியது.

அப்பர், தேவாரம் பாடி அப்பூதி மகனைக் கடித்த அரவின் விடத்தை மாற்றினான்றே? அதேபோல நமது கவியும், சிவனே, தில்லையப்பனே, உன்னைத்தவிர வேறு மருத்துவனை யறியேன்; உனது திருநாமத்தைத் தவிர வேறு மருந்தறியேன்!'' என்று பாடினார்.

இ-ம் -மோகனம் - ஏக தாளம்

### பல்லவி

அருமருந்தொரு திருமருந்து
அம்பலத்தே கண்டேனே! (அரு)

### அநுபல்லவி

திருமருந்துடன் வருமருந்து
தில்லை அம்பலத் தாடுமருந்து

இருவினைகள் அறுக்குமருந்து
ஏழையடியார்க் கிரங்கு மருந்து !
(அரு)

சரணம்

திரித்தித் தித்தியென் றாடுமருந்து
தேவாதி மூவர்கள் காணுமருந்து
கருத்தைத் திருத்தி யிருத்துமருந்து
காலனைக் காலால் உதைத்த மருந்து
(அரு)

பாம்பு விஷம் இறங்கி விட்டது. விடமுண்ட சிவனுக்கு இந்த விடத்தை மாற்றுதல் அறிதாமோ?

## கரு. நாத உடல்

பக்தர் தில்லை சென்று, நடன சிகாமணிக்கு நன்றி செலுத்

திப் பாமாலை சூட்டிக் கொண்டு இறுதி நாட்களை இன்பமாகக் கழித்தார். அவற்றின் மூலம் முத்துத் தாண்டவரின் பரிசுத்த மான வாழ்வும், மனம் நிறைந்த அருள் வாக்கும், அன்புப் பெரு மையும் புலனாகின்றன

அன்பு முதிர முதிர மனிதனுள் ஒரு புதிய தூயமாறுதல் உண்டா கிறது. கூடத்தில் பிடித்த தீ, கூடத்தையே மிச்சம் விடாமல் உண்டு விடுகிறதல்லவா? அது போலவே, திருவருளும் மனிதனு டைய ஆசை ஆணவ கன்ம மாசு களை உண்டு, ஜன்மத் தொல்லை யைத் தீர்க்கிறது. மனிதன் புனி தனாகிறான்; அந் நிலையில் அப் படியே இறைவனுடன் ஐக்கிய

மாக அவன் ஆர்வமுறுகிறுன். மாணிக்கவாசகரும் அவ்வாறே சிவ ஜோதியில் லயமானுர். முத்துத் தாண்டவருக்கு மாணிக்க வாசகரைப் போலவே சிவ ஐக்கியம் எய்த வேண்டுமென்ற ஆர்வம் இருந்தது.

"என் இருவினைபோக, மறுபிறவியில்லாமல், பிறவிப் பிணி நீங்க, நான் அருளாண்டவனைக் கலந்து கொள்வேன். இறைவனே, பிறர் கட்டையில் வைத்துச் சுடாமல், குழியிற் புதைக்காமல், எவர் சடங்குகளும் இல்லாமல், மாணிக்கவாசகரைப் போல் உன்னுடனே நான் ஐக்கியமாகி மறைய வேண்டும்! அப்பர், சம்பந்தர் போன்ற அரு

ளடியார் அவ்வாறு உடனுடன் கலந்தனர்; அத்தகைய முத்தி எனக்குத் தந்தருள்!'' என்று இறைவனைப் பாடினார்.

"கட்டையின் மேல் வைத்துச்
சுட்டு விடாதே,
கள்ளக் குழியிற் புதைந்துவிடாதே,
பட்டும் அணியும் தரித்து
அயலோர் வந்து
பால் அள்ளிக் குத்தாதே,
சடங்கு செய்யாதே,
மாணிக்க வாசகர் பேறெனக்குத்
தரவல்லையோ? அறியேன்''

என்று பாடினார். இதுவே அவரது இறுதிப் பாட்டு. இதன் பிறகு அவரை எவரும் பார்க்க

வில்லை. உடல் மறைந்தது ; உயிர் மின்னென இறைவெளியிற் கலந்தது : மிச்சம் ஐம்பது பதங்களே ! அவற்றில் மூலம் முத்துத் தாண்டவர் சிரஞ்சீவியாக நாதவுடல் கொண்டு நம்முடன் வாழ்கின்றார் !

## கக. உபதேச மணிகள்

இதனடியில் மிளிரும் திருவாக்குகள், சிதம்பரம் சபாநாதர் பேரில முத்துத்தாண்டவர் பாடிய கீர்த்தனங்கள், பதங்களிலிருந்து தொகுக்கப் பெற்றவை:—

1. மனமே, சிவனை மறவாதே ; ஒருக்காலும் மறவாதே ; சம்புவை நம்பு, நினை, துதி, பதம் பெறுவாய் !

2. பெண்ணாசை வந்து பிடித்தாலும், நம்மை எண்ணமலே ஒருவர் ஏசி யடித்தாலும், மனது புண்ணாகித் துடித்தாலும், கதியின்பந் தரும் குருபரனை மறவாதிரு மனமே!

3. பேசாதே நெஞ்சே; பின் சொல்லிப் பேசியுந்தான் என்ன கண்டாய்? பேசில், ஈசர் புலியூர்வளர் நேசர் அனுபூதியல்லால் வேறு பேசாதே!

4 மனமே, ஆமையாய் ஐந்துறுப்பையும் இழுத்துள்ளிருத்தி, சோமசேகரன் பதத்தைக் கருத்துள்வைத்து நாடிக்கோ; பொருளைத் தேடிக்கோ; முத்தி வழியைக் கூடிக்கோ; நானென்ற சத்தம் போடாதே, பிறகு ஆனந்தமே!

5. சின்மயமாகிய சிதம்பரமே முத்தி தரும்; ஜன்மம் *ஈடேறச் சிதம்பரமே துணை. மனமே, இதை நம்பு!

6. மனமே, ஈசனை, கனகசபேசனை, ஞானப்ரகாசனை, திருநடராஜனைத் தினமும் தோத்திரஞ் செய்; உனக்கு இது மாத்திரம் உத்தமமே!

7. நெஞ்சே, சிற்றம்பலவரைப் பற்று; நித்தம் நினை, நினைத்தால், உனக்கு வித்தை வரும்; உயர் புத்தி வரும்; செல்வம் மெத்த வரும்; எல்லாம் ஒத்துவரும்.

8. தேடித்திரிந்து திகையாதே நெஞ்சே; சிற்றின்பத்தாலே ஜகமெல்லாம் பஞ்சே!

9. மனமே, நானென்ற ஆணவந் தன்னையே நீக்கு; நாதாந்தப் பேரொளி தன்னிலே தாக்கு; மோனமாம் மந்திரத்துண்மையை நோக்கு; முத்திக்கு வித்தாய் முழுமதி யாக்கு!

10. நெஞ்சமே, போட்டவிடத்திற் பொருள்தனைத் தேடு; போத நிஷ்டையுட் புகுந்து நீ யாடு; நாட்டமுடன் சற்குரு பாதந் தேடு; பின்னர் நாலாம் பதத்தில் அருள் ஞான வீடு! இதை அறி.

11. சிவசிதம்பரமே தெரிசிக்க ஜெனனமில்லை; மனமே, இது நிஜமே!

12. கெட்டுப்போகாதே நெஞ்சே; சிட்டர் தொழுந் தில்லையில் வாழ்

சிவனை, "சிவனே, சிவனே" யென்றுரையாமல் அநியாயமாய்க் கெட்டுப் போகாதே நெஞ்சே!

**13.** பொன்னம்பலவாணு, இன்னம் பிறவாமலே எனையாளாய்; என் முறை கேளாய்; காயமே நிலையென்றெண்ணி, தீய பாவமே பண்ணி, மாய நரகை நண்ணி, இனியும் என்னால் வருந்தவே முடியாது; இந்த ஜன்மம் போதும் போதும், ஐயனே போதும்! ஆண்டருள் மெய்யனே!

**14.** காரணங் கடந்த பூரணத்துடனே, கலந்துகொள்வேனே; இனி நான் கலந்து கொள்வேனே!

15. 'ஹரஹர சிவசிவ அம்பல வாணா, என்னை ஆண்டருள்! மன முருகுது; மையல் பெருகுது, மதிய னல் மூளுது; வகை யென்ன செய் வேன்? கிருபை செய்!

முற்றிற்று.

# அன்பு நிலய நூல்கள்

## யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

### இயற்றியவை

| | ரூ அ |
|---|---|
| ஸ்ரீ சங்கர விஜயம் | 0-5 |
| கோபாலகிருஷ்ண பாரதியார் | 0-3 |
| சதாசிவ ப்ரம்மம் | 0-2 |
| ஸ்வாமி இராமதீர்த்தர் | 0-2 |
| அண்ணாமலை ரெட்டியார் | 0-3 |
| சாது ஜவானி | 0-6 |
| கஸ்தூரி | 0-6 |
| அன்பு வழி | 0-6 |
| ஓவியக்கவி வில்லியம் ப்ளேக் | 0-10 |
| அன்பின் அற்புதம் | 1-0 |

---

கிடைக்குமிடம் :

**ANBU NILAYAM**

RAMACHANDRAPURAM (Post)
Trichy Dist.
S. India.